இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 106– திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 10 – திங்கள்கிழமை 25 நவம்பர் 2024 – வெளியீர் 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 106: Thiruvalluvar Year - 2055 - Karthigai 10 - Monday 25 November 2024 - Dak 16 Pages ₹ 5.00

### ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்: ஹேமந்த் சோரன் – ‘இந்தியா’ கூட்டணி வெற்றி!

## மக்களாட்சிக்கும் மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!





சென்னை, நவ.25-

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஹேமந்த் சோரன் மற்றும் ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றி; மக்களாட்சிக்கும், மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி - என, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**ஜார்க்கண்ட் மாநிலத்தில் அனைத்துத் தடைகளையும் கடந்து வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள ஹேமந்த் சோரன் அவர்களுக்கும், நமது ‘இந்தியா’ கூட்டணிக்கும் எனது வாழ்த்துகள்.**

**அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவது, பழிவாங்கும் அரசியல் மற்றும் பல தடைகளைக் கடந்த 5 ஆண்டுகளில் பா.ஜ.க. உருவாக்கினாலும் அத்தனையையும் துணிச்சலுடனும் உறுதியுடனும் எதிர்த்து நின்று ஹேமந்த் சோரன் அவர்கள் வென்றுள்ளார்.**

**அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் அவரது தலைமையில் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை ஜார்க்கண்ட் மக்கள் தேர்தல் முடிவுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். இது மக்களாட்சிக்கும் மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி!”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### அமெரிக்க நீதிமன்றத்தில் பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள

## அதானி முறைகேடுகள் குறித்து விவாதிக்க வேண்டும்!

### அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, நவ.25-**

**அமெரிக்க நீதிமன்றத்தில் பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள அதானியின் முறைகேடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்று புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் இன்று தொடங்கி டிசம்பர் 20ம் தேதி வரை நடைபெறவுள்ளது. வக்பு வாரிய சட்ட திருத்தம், ஒரே நாடு ஒரே தேர்தல் உள்ளிட்ட மசோதாக்களை இக்கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இக்கூட்டத்தொடரில் பல்வேறு பிரச்சனைகளை எழுப்ப எதிர்க்கட்சிகளும் திட்டமிட்டுள்ளன.

இதனால், கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுத்தது. இதன்படி, நேற்று காலை 11 மணிக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அதானி குழுமத்தின் முறைகேடுகள், மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இதனைத் தொடர்ந்து மக்களவை தி.மு.க. குழு தலைவர். டி.ஆர்.பாலு, மாநிலங்களவை திமுக குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது, நீட் விலக்கு, மதுரை எய்ம்ஸ், மீனவர் பிரச்சினை, பள்ளிக் கல்விகான ஒன்றிய அரசின் நிதி விவகாரங்கள் குறித்து நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பிரச்சினை எழுப்ப உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதானிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ள நிலையில், அதானி நிறுவனங்கள் குறித்த விசாரணையை செபி தொடங்கி உள்ளது.

இந்தியாவில் சூரியசக்தி மின்சார விநியோகம் தொடர்பான ஒப்பந்தம் பெறுவதற்கு, அரசு அதிகாரிகளுக்கு சுமார் 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கில் தொழிலதிபர் கவுதம் அதானிக்கு அமெரிக்காவின் நியூயார்க் நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது.

முறைகேடாக பெறப்பட்ட இந்த ஒப்பந்தத்தை முன்வைத்து, கடன் மற்றும் பத்திரங்கள் மூலம், அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை அதானி குழுமம் திரட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கவுதம் அதானி மற்றும் அவரது உறவினர் சாகர் அதானி உட்பட 7 பேருக்கு இதற்கான சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. 21 நாட்களுக்குள் அவர்கள் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதானி நிறுவனங்கள் குறித்த விசாரணையை இந்திய பங்குச் சந்தை பரிவர்த்தனை வாரியமான செபி தொடங்கி உள்ளது. அதானி குழுமம் அனைத்து விதமான தகவல்களையும் பங்குச்சந்தைகளுக்கு வெளிப்படுத்தியுள்ளதா? என்பதை 2 வாரங்களின் ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு மும்பை மற்றும் தேசிய பங்கு சந்தைகளுக்கு செபி நோட்ஸ் அனுப்பி உள்ளது. அமெரிக்கநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையின் அடிப்படையில் அதானியின் முறைகேடுகள் குறித்து இந்தியாவில் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல்!**

இது குறித்து உச்சநீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், இந்தியாவில் சூரியசக்தி மின்சார விநியோகம் தொடர்பான அதானியின் முறைகேடுகள் குறித்து நியூயார்க் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க நீதித்துறையின் அறிக்கைகள் அதானியின் சட்டவிரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதானி மீதான குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமானவை என்றும், நாட்டின் நலன் கருதி அதானியின் மோசடிகள் குறித்து இந்தியாவில் உரிய விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது. ஹிண்டன்பர்க் அம்பலப்படுத்திய மோசடி தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் செபி விசாரணைக்கு உத்தரவிட்டும் அந்த விசாரணை இன்னும் முடிக்கப்படவில்லை என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### கழக ஆட்சியின் திட்டங்களுக்கு கலைஞர் பெயர் வைக்காமல்,

# கரப்பான் பூச்சியின் பெயரையா வைக்க முடியும்?

### திருச்சி மாவட்டம் – துறையூரில் – முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழாவில்

## எடப்பாடி பழனிச்சாமிக்கு – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூடு!

**துறையூர், நவ.25-**

**திருச்சி வடக்கு மாவட்டம், துறையூரில், நேற்று முன்தினம் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். துறையூர் பேருந்து நிலையம் அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகையில், “கழக ஆட்சியின் திட்டங்களுக்கு கலைஞர் பெயர் வைக்காமல், கரப்பான் பூச்சியின் பெயரையா வைக்க முடியும்?” என்று எடப்பாடி பழனிச்சாமிக்கு காட்டமாக கேள்வி எழுப்பினார்.**

முன்னதாக, துறையூர் நகர் முழுவதும் அவருக்கு வழிநெடுகிலும் சாலைகள் வீதிகள் எங்கும் பெரும் திரளாக திரண்டிருந்த கழக முன்னணியினர், கழக இளைஞர் அணியினர், தொ.மு.ச. தோழர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் அன்போடும், உற்சாகத்தோடும் வரவேற்பு அளித்தனர். துறையூர் மருத்துவமனை சாலை, ‘ரத்னா காம்ப்ளக்ஸில்’ கலைஞர் நூலகத்தைத் திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து, துறையூர் பேருந்து நிலையம் அருகில், முத்தமி ழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

திருச்சி விமான நிலையத்திலிருந்து இறங்கி, துறையூருக்கு வருவதற்கு 52 கிலோமீட்டர் அதாவது ஒரு மணி நேரத்தில் வந்திருக்க வேண்டும். கிட்டத்தட்ட 3 மணி நேரம் ஆகியிருக்கிறதென்றால், அந்த அளவிற்கு வழி நெடுக நம்முடைய கழகத்தினரும், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களும், குறிப்பாக, பொது மக்களும் திரண்டு நின்று வரவேற்று, வாழ்த்தி என்னை இங்கு வழியனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இந்தத் துறையூர் தொகுதிக்குப் பல முறை வந்து இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, விளையாட்டுத்துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். ஆனால், முதல் முறையாகத் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்று, உங்களையெல்லாம் பார்த்து, உங்களின் வாழ்த்துகளை வாங்க வந்து இருக்கிறேன்.

**கழகத் தலைவர் உத்தரவு!**

அதில் கூடுதல் சிறப்பு என்னவென்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் கலைஞரின் சிலையை நிறுவ வேண்டும் என்று. நமக்கு உத்தரவிட்டார். அதன்படி இன்றைக்கு இந்தத் துறையூர் சட்டமன்றத்தில் நம் முத்தமிழறி ஞர் கலைஞரின் சிலையைத் திறக்கின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்த அமைச்சர் அண்ணன் நேரு அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணிக்குத் தலைவர் அவர்கள் மேலும் ஒரு பொறுப்பைக் கொடுத்தார். அனைத்துச் சட்டமன்ற தொகுதிகளிலும் ஒரு ‘கலைஞர் நூலகம்’ திறக்க வேண்டும் என்று சொன்னார். அதன்படி நூலகத்தைத் திறந்து வைத்துவிட்டு, உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் அருண் நேரு அவர்களின் நாடாளுமன்ற அலுவலகத்தையும் திறந்து வைத்துவிட்டு, இங்கு வந்து இருக்கிறேன்.



**அண்ணாவின் சிலை அருகே!**

இன்றைக்கு இன்னும் கூடுதல் சிறப்பு என்னவென்றால் பேரறிஞர் அண்ணாவின் சிலை அருகே, கலைஞரின் சிலையை வைத்ததற்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கலைஞரின் சிலையை, தமிழ்நாடு முழுக்கத் திறக்கிறோம். பல்வேறு திட்டங்களை கலைஞரின் பெயரில் அறிவிக்கிறோம். `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’, `கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை’, `கலைஞர் நூலகம்’, ‘கலைஞர் விளையாட்டு அரங்கம்’ இப்படி எத்தனையோ திட்டங்களை நாம் துவக்கி வைக்கிறோம். ஒவ்வொரு சட்டமன்றத்திலும் கலைஞரின் சிலையைத் திறக்கிறோம் என்றால், கலைஞரின் கொள்கைகளை, கலைஞரின் லட்சியங்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம் என்று அர்த்தம்.

நம் எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஒரு நான்கு மாதங்களுக்கு முன்பு, ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். எதற்கெடுத்தாலும் கலைஞர் பெயரை வைக்கிறீர்கள். வேறு பெயரே கிடைக்கவில்லையா என்று. நல்ல, நல்ல திட்டங்களுக்குக் கலைஞர் பெயரை வைக்காமல், கரப்பான்பூச்சி பெயரையா வைக்க முடியும். கரப்பான்பூச்சி என்று யாரை சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.

தி.மு.க. காரனுக்குத் தெரியவில்லை என்றால், வேறு யாருக்கும் தெரியாது. அவர் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார். உதயநிதிக்கு எதற்குத் துணை முதலமைச்சர் பொறுப்பு கொடுக்கிறீர்கள். அவருக்கு என்ன தகுதி இருக்கு. அவருக்குத் தகுதியே கிடையாது என்று சொல்கிறார். ஆமாம், நான் ஒத்துக்கொள்கிறேன். எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு இருக்கின்ற தகுதி நிச்சயமாக எனக்குக் கிடையாது.

ஏனென்றால், நான் கூவத்தூருக்கு சென்று, டேபிள் சேருக்குள் புகுந்து போய் யார் காலையும் பிடித்து அந்தப் பொறுப்புக்கு வரவில்லை.

**உங்கள் வீட்டுப்பிள்ளை!**

நான் இன்னும் சொல்கிறேன். எவ்வளவு பெரிய பொறுப்புக்கு வந்தாலும், இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் இப்படி

தொடர்ச்சி 3ஆம் பக்கம்